# கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

# சர்வதேச தர சான்றிதழுக்கான அரசாங்கத்தின் நிவாரணம் - 2025
## ISO 9001, ISO 14001, ISO 22000, ISO 50001

கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சினால் உள்நாட்டு கைத்தொழில்களின் பயன்பாடுகளை மேலோங்கச் செய்வதற்கு தர முகாமைத்துவத்தை மேம்படுத்துதல், சுற்றாடல் முகாமைத்துவத்தை மேலோங்கச் செய்தல், வலுசக்தி வினைத்திறன் மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பவற்றை மேம்படுத்துவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிச் சந்தையினுள் போட்டி ரீதியில் பிரவேசிப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு 2025 ஜனவரி 01ஆம் திகதியில் வருடாந்த புரள்வாக 1 பில்லியன் ரூபாவுக்குக் குறைந்த மற்றும் 200 ஊழியர்களுக்கும் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட பின்வரும் பிரிவுகளுக்குரித்தான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு மேற்கூறப்பட்ட சர்வதேச தரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கலாம்.

| | | |
|---|---|---|
| • பதப்படுத்தப்பட்ட உணவு உற்பத்திகள் | • பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை சார்ந்த உற்பத்திகள் | • இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் |
| • பெறுமதி சேர்க்கப்பட்ட வாசனைத் திரவிய உற்பத்திகள் | • பெறுமதி சேர்க்கப்பட்ட தும்பு மற்றும் தும்பு சார்ந்த உற்பத்திகள் | • பொதியிடல் உற்பத்திகள் |
| • பால் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகள் | • காலணிகள், தோல், தோல் சார்ந்த உற்பத்திகள் | • இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்திகள் |
| • உலோகம், டை மற்றும் அச்சு, இயந்திரோபகரண துணைப்பாகங்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் | • மரம், மரம் சார்ந்த உற்பத்திகள் மற்றும் தளபாட உற்பத்திகள் | • மோட்டார் வாகன துணைப்பாகங்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் |
| • மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உற்பத்திகள் | • மேற்கத்தேய மற்றும் உள்நாட்டு மருந்து மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் | • கிரனைட், டைல், கட்டிடப் பொருட்கள் மற்றும் களிமண், மட்பாண்டம் சார்ந்த உற்பத்திகள் |
| • நிறப்பூச்சு, இரசாயனப் பொருட்கள், அச்சிடல் பொருட்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் | • ஒப்பனை பூச்சுகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் | • கனியங்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் |
| • ஆடைகள், துணிகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் | | |

**பிரதிபலன்கள் :**

- தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்களுக்கு அதிகபட்சம் 200,000.00 ரூபா வரையான சான்றிதழ் கட்டணம் செலுத்தப்படும் என்பதுடன் பற்றுச்சீட்டுகளைச் சமர்ப்பித்ததன் பின் குறித்த கட்டணம் பிரதியீடு செய்யப்படும்.
- அரசு சார்ந்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது அமைச்சு இணையதளத்தில் புது தரவேற்றம் செய்யப்பட்ட ஆலோசனை நிறுவனமொன்றில் ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்வதானால் ஆலோசனைச் சேவைக் கட்டணம் அதிகபட்சம் 100,000.00 வரை பிரதியீடு செய்யப்படும்.

**தகுதிகள்** :

- குறைந்தபட்சம் அண்மைய கடந்த 3 வருடங்களினுள் உற்பத்தி நடவடிக்கைளை நடாத்திக்கொண்டு சென்றிருத்தல் வேண்டும். (உற்பத்தி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்)
- விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் வேளையில் கைத்தொழில் வெற்றிகரமாக செயற்பாட்டு நிலையில் இருக்க வேண்டும்.
- பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்படும் நாளில் குறித்த சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக சான்றுபடுத்திய மற்றும் ஆலோசனை நிறுவனத்திற்கு விண்ணப்பிக்காத கைத்தொழிலாகவிருத்தல் கட்டாயமாகும்.
- மேற்கூறப்பட்ட சான்றுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னைய வருடங்களில் எவ்வித பிரதிபலன்களையும் பெற்றுக்கொள்ளாத கைத்தொழில்களுக்கு தெரிவின்போது முன்னுரிமை வழங்கப்படும்.

**தேர்ந்தெடுக்கப்படும் முறை :**

- பத்திரிகை அறிவித்தலில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் மற்றும் நேர்முகத் தேர்வில் உறுதி செய்துகொள்ளப்படும் விடயங்களின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**ஏனைய நிபந்தனைகள் :**

- இலங்கை அங்கீகார சபையினால் **(SLAB)** அங்கீகரிக்கப்பட்ட சான்றுபடுத்தும் நிறுவனமொன்றில் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன் தமது நிறுவனத்தின் சான்றுபடுத்தல் செயற்பாடுகளை முடிவுறுத்துவதாக அமைச்சுடன் இணக்க உடன்படிக்கையொன்றுக்கு உடன்பட வேண்டும்.
- பெற்றுக்கொண்ட தரச் சான்றிதழை குறைந்தபட்சம் மூன்று 03 வருட காலம் வரை தொடர்ச்சியாக நாளது தரவேற்றம் செய்து பேணிக் கொண்டு செல்வதாக அமைச்சுடன் இணக்க உடன்படிக்கையொன்றுக்கு உடன்பட வேண்டும்.
- சான்றிதழ் மற்றும் பற்றுச்சீட்டை 2025 ஒக்டோபர் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் அமைச்சிற்குச் சமர்ப்பித்து குறித்த சான்றிதழ் கட்டணம் மற்றும் ஆலோசனைக் கட்டணத்தை பிரதியீடு செய்துகொள்ளல் வேண்டும்.
- உள்நாட்டுக் கைத்தொழிலாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தபட்சம் உள்நாட்டு பங்குதாரர் **60%** நிறுவனத்தின் உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- குறித்த கைத்தொழில் சான்றுபடுத்தல் செயற்படுத்தப்படும் காலத்தினுள் வேறு அரசாங்க நிறுவனங்களில் இதற்குச் சமமான பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்க வேண்டும்.

**விண்ணப்பித்தல் :**

பின்வரும் **QR** குறியீடு அல்லது கூகுல் நீடிப்பு மூலம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2025 ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு :**

தொலைபேசி இல. : 011-2422319, 011-2333312, 011-2328973

முகவரி : பணிப்பாளர், அபிவிருத்திப் பிரிவு, கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு, 73/1, காலி வீதி, கொழும்பு 03.

Email : iso2023.mi@gmail.com

Google Form Link
*https://shorturl.at/DqJyS*

**செயலாளர்,**
**கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு**